**தலைப்பு 407 – பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீடுசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்களின் பயிர்செய்கையை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீடுசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்களின் பயிர்செய்கையை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீடுசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்களின் பயிர்செய்கையை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் தேசிய கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களில் இருந்தான தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீடுசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்களின் பயிர்செய்கையை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு,

தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

மீளாய்வாண்டின் போது நிறுவப்பட்ட புதிய அமைச்சு ஒன்றாக காணப்பட்டமையால் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்காக தயாரிக்கும் தேவை ஒன்று காணப்படவில்லை.

## 1.6 நிதி நிலைமைக் கூற்று

### ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரியின் நிதியல்லாத சொத்துக்களின் மீதிகள் மற்றும் அமைச்சின் மீதிகள் இடையே ரூபா 292,000 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | காணப்படும் வித்தியாசத்தை திறைசேரி அச்சுப் பதிவின் படி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். | வித்தியாசங்களை இணக்கங் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரி அச்சுப் பதிவின் படி பொது வைப்புக் கணக்கின் வரவு மீதி ரூபா 4,497,317 தொகை எனினும் அமைச்சு புத்தகங்களின் படி அம் மீதி ரூபா 4,781,575 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 284,258 தொகை மிகையாக அமைச்சின் புத்தகங்களில் காட்டப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் மாதத்தில் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 284,258 இற்கான தொகை வைப்புப் பேரேட்டில் கொடுப்பனவு ஒன்றொன பதிவு செய்யப்பட்ட போதிலும், போதியளவு கட்டுநிதி இன்மையின் காரணத்தினால் அத் தொகை அவ்வாண்டில் செலுத்துவதற்கு முடியாமல் போனது. அக் கொடுப்பனவு 2021 ஜனவரி மாதத்தில் செலுத்தப்பட்டமையால் திணைக்கள பேரேட்டில் வைப்புக்கள் கொடுப்பனவு வரவு ரூபா 284,258 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. 2020 ஆண்டில் செலுத்த முடியாது போன அத்தொகை 2021 ஆம் ஆண்டில் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டு வைப்புப் பேரேடு சரி செய்யப்பட்டது. | வைப்புக் கணக்கு மீதிகளுடன் திறைசேரி புத்தகங்களின் மீதிகள் இணக்கஞ் செய்யப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **ஏற்பாடுகள் சேமிக்கப்படல்** | | |
| (அ) மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்படல் | | |
| மீண்டுவரும் செலவு விடயங்கள் 03 இல் மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் 02 இல் ரூபா 1,445,000 தொகைக்கான மொத்த தேறிய ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக கௌரவ அமைச்சர் மற்றும் பதவியணியினர் வெளிநாட்டு பிரயாணங்கள் மேற்கொள்ளாமையாலும் கௌரவ அமைச்சர் வருட இறுதியில் கடமைக்கு சமுகம் அளித்தமையால் சில செலவுகள் மேற்கொள்ளும் தேவை ஏற்பட்டிருக்காமையும், | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அரசாங்கத்தினால் வாகனக் கொள்வனவு வரையறுக்கப்பட்டமையினாலும் மற்றும் செலவுகள் மேற்கொள்வதற்கு விண்ணப்பித்திருக்காத சில செலவு விடயங்களுக்காக திறைசேரியால் ஏற்பாடுகள் வழங்கியிருந்தமையாலும், ஆகிய விடயங்கள் காரணத்தினால் 03 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 02 மூலதனச் செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,445,000 தொகைக்கான மொத்தத் தேறிய ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மீண்டுவரும் செலவு விடயங்கள் 11 இல் மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் 02 இன் ஏற்பாடுகள் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு ரூபா 3,568,782 தொகையாக காணப்பட்டதுடன் அவை 30.4 முதல் 97.37 சதவீதத்துக்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | 2020 ஆண்டின் போது காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் காரணமாக அலுவலகம் அநேக நாட்கள் மூடப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுச் பொறுப்புக்களுக்கு நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 இலக்கங் கொண்ட பொதுக் கணக்கு சுற்றறிக்கையின் 2(ஈ) பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 05 செலவு விடயங்களில் சேமிப்பினை மிகைத்து ரூபா 16,095,305 இற்கான பொறுப்புக்களுக்கு நெருங்கியிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது அடிக்கடி குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கும் போது சில செலவு விடயங்கள் மிகையாகவும் சில செலவு விடயங்கள் பற்றாக்குறையாகவும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டி இருந்த சேமிப்பினை மிகைத்து பொறுப்புக்களுக்கு நெருங்கியிருந்த ரூபா 16,095,304 இற்கான மொத்தப் பெறுமதியில் 97 சதவீதத் தொகை அதாவது ரூபா 15,612,244 தொகை ஹந்தபிம அதிகார சபையின் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 407-2-3-1503 செலவு விடயத்திற்கு உரியதாகும். 2020 ஆண்டின் போது அந்த அதிகார சபையின் செலவுகளுக்காக போதியளவு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காமையால் இவ்வாறான நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது. 2021 ஆண்டின் போது இதற்காக போதியளவு மேலதிக ஏற்பாடு திறைசேரியில் இருந்து பெற்றுக் கொண்டு அந்தப் பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டுள்ளது. | |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேலை இடைநிறுத்தப்பட்ட, சேவையை விட்டுச் சென்றுள்ள, ஏனைய ஆகிய தொகுதிகளின் கீழ் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 540,667 தொகையாக இருந்தது. | (i) வேலை இடை நிறுத்தப்பட்டவர்களுக்கு அமைச்சினால் அனுப்பப்பட்ட கடிதத்தை பெற்றுக் கொண்டில்லாமையால் வதிவினை உறுதிப்படுத்துமாறு மத்திய கொழும்பு பிரதேச செயலாளர் மற்றும் தேர்தல் ஆணையாளர் ஆகியோருக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இந்தக் கடன் தொகையை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என.<br>(ii) வெளிநாட்டு விவகார அமைச்சிற்கு ஞாபகமூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சேவையை விட்டுச் சென்றுள்ள ஒரு உத்தியோகத்தரின் கடனை அறவீடு செய்தல் தொடர்பான கடிதத்தை பெற்றுக் கொள்ளாமை மேலும் உத்தியோகத்தர் ஒருவரின் வதிவினை உறுதிப்படுத்துவதற்கு மொரட்டுவ பிரதேச செயலாளரினால் தேர்தல் ஆணையாளருக்கு | தாபனக் கோவையின் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் தொகையை அறவீடு செய்வதற்கும் கடன் மீதிகளை புதிதாக சேர்க்காமல் இருப்பதற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும். |

அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்த கடன் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன்.

(iii) ஏனைய தொகுதிகளுக்கு உரிய ஒரு உத்தியோகத்தரின் ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கணக்கு பொழிப்பூடாக கடன் தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மேலும் ஒரு உத்தியோகத்தரின் கடன் தொகை தவணைகளாக செலுத்தப்பட்டு வருகின்றது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மேலதிக செயலாளர் ஒருவருக்கு வழங்கியிருந்த ரூபா 106,990 தொகை பெறுமதியான டெப் கணினி அந்த அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கு அல்லது திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் பற்றாக்குறை ஒன்றென பண்டக் கணிப்பீட்டு அறிக்கையில் காட்டப்பட்டிருந்தன. | அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மேலதிக செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த கணினி துணைக் கருவிகளில் லெப்டொப் கணினி மற்றும் (Pen Drive) தற்போது முறைப்பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. டெப் கணினியை ஒப்படைக்குமாறு அந்த பெண் உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இடமாற்றங்களின் போது உத்தியோகத்தர்களின் பொறுப்பிலுள்ள பண்டங்களை திருப்பிப் பெறுவதற்கு முறையான நடைமுறை ஒன்று பேணப்பட வேண்டும். |

**3.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2018, 2019, 2020 ஆண்டுகள் தொடர்பாக 04 வாகனங்களுக்கு உரிய ரூபா 110,094 இற்கான நட்டம் மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவீடு செய்யாமல் நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் அறவிடப்பட வேண்டியவை என காட்டப்பட்டிருந்தது. | இந்த நட்டம் அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும், நி.பி.109 இன் மூலம் பதிலழித்தல் இது வரை மேற்கொள்ளப்படாமையால் தொடர்ந்தும் அறவீடு செய்வதற்கு / பதிவழிப்பதற்கு / கைவிடுவதற்கு நட்டங்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. PG – 9885 இலக்கங் கொண்ட வாகனத்தின் நட்டம் 2021/04/07 திகதி ஏடுகளில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் சரியான தரவுகள் உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மேலும் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு நட்டங்கள் தொடர்பான கூற்றின் படி ரூபா 464,097 இற்கான களஞ்சிய இருப்பு சேதம் ஒன்று மற்றும் ரூபா 2,569,008 வாகன விபத்து நட்டங்கள் 17 தொகை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இப் பெறுமதி ஒட்டுமொத்த களஞ்சிய இருப்பு சேதத்தில் 50% ஆகும். அத்துடன் மீதியான 50% நட்டத்தை பொறுப்புச் சொல்லவேண்டியவர் என இனங்கண்டுள்ள உத்தியோத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றிருப்பதுடன் ஒரு உத்தியோகத்தரிடம் மொத்தத் தொகையும் அறவிடப்பட்டது. ஏனைய இரண்டு உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்தல் தொடர்பாக அந்தத் உத்தியோகத்தர்கள் ஓய்வூதியம் பெறும் பிரதேச செயலகத்திடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன், அந்த தகவல்கள் கிடைத்த பின்னர் இந்த நட்டத்தினை பதிவழித்தல் தொடர்பாக | நட்டங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் விரைவாக எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு தீர்மானம் ஒன்று எடுக்க வேண்டியுள்ளது.<br><br>அவற்றில் KY – 5534, NB-3015 மற்றும் PD– 9885 இலக்கங் கொண்ட வாகனங்களின் நட்டம் 2021.04.06 திகதி பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி. இறுதி விசாரணை அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் இவ்வாண்டில் பதிவழித்தல்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதி வரை உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், இரண்டாம் தர தொகுதியைச் சேர்ந்த அரச முகாமைத்துவ உதவியாளர்கள் பதவி 03 இற்கான மிகை அறிவிக்கப்பட்டிருந்தது. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக உள்ளது. இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக பொது நிர்வாக அமைச்சு இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பொது நிர்வாக, உள்நாட்டு விவகார, மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அமைச்சுச் செயலாளரின் 2020.08.05 திகதிய இடமாற்றக் கட்டளையின் படி அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் பதிலாள் இன்றி உடனடியாக செயற்படுமாறு ஜனாதிபதிச் செயலகத்திற்கு மாற்றுவதற்கு நேரிட்டமையால் அப் பதவி வெற்றிடமாகியது.<br><br>மொழிபெயர்பாளர் சேவையின் வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை இந்த வெற்றிடம் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஆட்சேர்ப்பதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |